

தூத்துக்குடி மாவட்டம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் சீரமைக்கும் பணிகள் நடைபெற்றுவருவதை அமைச்சர்கள் .எ.வ.வேலு, அமைச்சர் பி.கீதாஜீவன் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் செல்வராஜ், பொதுப்ப ணித்துறை அரசு செயலாளர் மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் .எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன் , தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்!

நெல்லை, செப். 5 -

பொதுப்பணித்துறையின் மூலம் நடைப்பெற்று வரும் அருங்காட்சியகப் பணிகளின் முன்னேற்றம், குறித்து, நேற்று முன்தினம் (4 .09.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு , பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர் களஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனேயே தமிழர் களின் அடையாளமாக 4,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில், மதுரைக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில், கீழடியில் மேற்கொண்ட அகழாய்வில் பழந்தமிழர்களின் நாகரிகத்தின் அடையாளமாக கிடைத்தப் பொருட்களைக் கொண்டு, அருங்காட்சியகம் அமைத்து பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சட்டமன்றப்பேரவை விதி 110இன்கீழ், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள். “வீரம் விளைந்த திருநெல்வேலி நகரத்தை ஒட்டி பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும்“ என்று அறிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதில், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் தொல்லியல் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலமாக கிடைத்தப் அரியப் பொருட்களை காட்சிப்படுத்த அருங்காட்சியகம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

இதுவரையில், கொற்கையில் 812 பொருட்கள், ஆதிச்சநல்லூரில் 1,620 பொருட்கள், சிவகளையில் 185 பொருட்கள் என 2,617 பொருட்கள் அகழாய்வு மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, 106 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீடு ரூ.33 கோடி மதிப்பீட்டில், 13 ஏக்கர் பரப்பளவில், 54,000 சதுர அடி கொண்ட 7 பகுதியாக கட்டடப்பட்டு வருகிறது. பொருநையில் கட்டப்பட்டு வரும் இந்த அருங்காட்சி யகத்தில், சிவகளைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த ஓர் கட்டடமும், ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும், கொற்கைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டடமும் மற்றும் சுகாதார வசதிகள் கொண்ட கட்டடங்களும் கட்டப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 90% சதவீதம் பணிகள் நிறைவடைந்து விட்டது.

மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து, இந்த நிதி ஆண்டிலேயே மக்கள் பார்வைக்கு கொண்டுவர வேண்டுமென அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், சங்கரன்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் முனைவர் ஆர். செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் முனைவர் கா.ப.கார்த்திகேயன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்பு அலுவலர்(டெக்னிக்கல்) இரா.சந்திரசேகர், சிறப்புப் பணி அலுவலர் இரா.விஸ்வநாத், மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

# திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திருமணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

சிவகங்கை,செப். 6 -

சிவகங்கை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் திருமதிஆர். ஜோன்ஸ் ரூசோ. இவரது மகன் நடிகருமான ஆர்.நிஷாந்த். ரூசோவிற்கும் கல்லடிதிடலைச் சேர்ந்த எல்.எட்வர்ட் ஜோசப் திருமதி மஞ்சுளா மேரி ஆகியோரின் மகள் எ.சினேகா கேத்தரின் ஆகியோரது திருமணம் இன்று (6.9.2024 - வெள்ளிக் கிழமை) காலை 11 மணியளவில் காரைக்குடியில் உள்ள பி.எல்.பி. பேலஸ் மஹாலில் கூட்டுறவுத்துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைச்சர்கள் கே.என். நேரு, தங்கம் தென்னரசு, எஸ். ரகுபதி,எஸ் .எஸ். சிவசங்கர், சி.வி மெய்யநாதன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இந்திய ஜனநாயக கட்சி தலைவர் ரவி பச்சமுத்து, இந்திய ஜனநாயக கட்சியின் அகில இந்திய இணைபொது



செயலாளர் திருமதி லீமா ரோஸ் மார்ட்டின் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. திருமணத்தினை கழகத் துணை பொதுச்செயலாளரும், பாராளுமன்ற குழு தலைவருமான திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைத்து சிறப்புரையாற்று கிறார்.

திருமணத்தில் மணமக்களை வாழ்த்தி முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், வசந்தம் கார்த்திகேயன், எஸ். மாங்குடி, இ.கருணாநிதி, கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. உட்பட மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சியினர் வாழ்த்திப்பேசுகிறார்கள். திருமண விழா ஏற்பாடுகளை திருமதி ஆர் ஜோன்ஸ்ருசோ, ராஜா ஸ்டீபன், ஆர் .ஜெம்மா. நிபிலா, க.அழகையா மற்றும் குடும்பத்தி னர்கள் செய்து வருகிறார்கள்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் திருமதி ஆதி. கண்ணாத்தாள் ஆதி. அதியமான் மகன் ஆதி. ராமசாமி கோவை அன்புநாதன் கீதா ஆகியோரின் புதல்வி அ.சுவேதா ஆகியோரது திருமணம் இன்று (6ம் தேதி வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணி அளவில் காரைக்குடியில் உள்ள சுப லட்சுமி மஹாலில் நடைபெறுகிறது . மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் அமைச்சர்கள் எஸ். ரகுபதி, தங்கம் தென்னரசு ,சிவ வீ. மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் திருமணத்தினை கழக துணை பொது செயலாளரும் நாடாளுமன்ற குழு தலைவர் திருமதி கனிமொழி எம்.பி. நடத்தி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

மணமக்களை வாழ்த்தி தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னாள் ஒன்றிய நிதிய மைச்சர் ப. சிதம்பரம் எம்.பி.காரைக்குடி மேயர் எஸ். முத்து துரை, துணை மேயர் என். குணசேகரன், முன்னாள் எம்.எல்.ஏ .கே ஆர். ராமசாமி, கார்த்திப.சிதம்பரம் எம்.பி, எம்.எல்.ஏ க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார்,எஸ்.மாங்குடி, ராம. கரி.மாணிக்கம், தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன் மற்றும் நிர்வாகிகள் வாழ்த்திப் பேசுகிறார்கள். திருமண விழா ஏற்பாடுகளை பொதுக்குழு உறுப்பினர் ஆதி கண்ணாத்தாள், அதியமான் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 6 -

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், இன்று (6.9.2024 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கத்தில்” எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதாசின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை மற்றும் தமிழினத் தொன்மைகளையும் பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் ஆகிய கொள்கைகளைக் பரப்புரைச் செய்திடவும், மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளை வழங்கிடவும் தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் கல்வி நிலையங்களில் அமைக்கப்பட உள்ள “தமிழ் மாணவர் மன்ற” சேர்க்கை விண்ணப்பப் படிவம் மற்றும் மன்ற அடையாள அட்டையினை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களிடம் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) கல்விநிலையங்களில் “தமிழ் மாணவர் மன்றம்” அமைப்பு ஏற்படுத்துதல்;

2) ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்புக்கான மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்துவது - குறித்து.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி. வி.எம்.பி.எழிலரசன் எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### மூவலூர் எம்.மூர்த்தி வரவேற்புரை!

# மயிலாடுதுறை மேற்கு ஒன்றியக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

மயிலாடுதுறை, செப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மாப்படுகை நாராயணி மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் எம். பி.எம்.பாலு தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகச் செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி வரவேற்றார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் டி.சிவக்குமார், எம்.பாரதி மதியழகன், எஸ்.அற்புதராஜ், ஒன்றியப் பொருளாளர் ஆர்.கருணாநிதி, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.குமரசாமி, எம்.ஏ.சி.இளஞ்செழியன், ஆர்.கே.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், மயிலாடுதுறை ஒன்றியக் குழு தலைவர் காமாட்சி மூர்த்தி, தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எஸ்.சுரேஷ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கே.பிரேம்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் உதயராஜ். ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், ஒன்றிய குழு உறுப்பினர் டி.சிவலக்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் டி.வேதநாயகம், பா. இரத்தினசாமி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

2024 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி தமிழகத்தில் 40க்கு 40 வெற்றிக் கனி பறித்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, மயிலாடுதுறை நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆர்.சுதா வெற்றிக்கு உழைத்திட்ட மயிலாடுதுறை மேற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், மாவட்டக் கழகம் அறிவித்தது போல் மயிலாடுதறை மேற்கு ஒன்றியத்தில் முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து மயிலாடுதுறை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து கொள்வது என்றும், பல்வேறு நலதிட்டங்களை அறிவித்து செயல்படுத்தி சிறப்பாக ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்டமன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் அவர்களின் இலக்கான 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் மயிலாடுதுறை மேற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்றும், மயிலாடுதுறை மேற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### திருவாரூர் மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு மாபெரும் மருத்துவமுகாம்!

## பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பலன் பெற்றனர்!

திருவாரூர்,செப். 6-

திருவாரூர் மாவட்ட மருத்துவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் துணை மேயர் மண்டல பொறுப்பாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த முகாமை மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் வி.ஜே.சரவணன் முன்னின்று சிறப்புடன் நடத்தினார்.

திருவாரூர் மாவட்ட மருத்துவர் அணி வருடம் தோறும் எண்ணற்ற மருத்துவ முகாம்களை மாவட்டம் தோறும் நடத்துவதோடு, பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ உபகரங்களையும் வழங்கி வருகிறது. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைபடி நடைபெறும் இந்த மருத்துவ சேவைகளின் வரிசையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாக்களை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி ஒன்றியம் மேட்டுப்பாளையத்தில் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் வி. ஜே.சரவணன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த முகாமில் பொதுமருத்துவம், பல் மருத்துவம், கண் சிகிச்சை மருத்துவம் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்த இந்த முகாமில், தஞ்சாவூர் துணை மேயர், மண்டல பொறுப்பாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி பங்கேற்றார். மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் டி.டி.எஸ்.திவாகரன் அனைவரையும் வரவேற்றார்.

முகாமிற்கு ஒன்றியச் செயலாளர் ப.பிரகாஷ், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் வி.ஜே.சரவணன், மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், பொதுக்குழு உறுப்பினர் செல்வஜெயதேவன், அவைத் தலைவர் வி.பி.பாலகிருஷ்ணன், புஷ்பநாதன், மாவட்டப் பிரதிநிதிகள் வழக்கறிஞர் பாஸ்கர், ரவிச்சந்திரன், வீரமணி, ஒன்றிய நிர்வாகிகள் சேது முருகானந்தம், தமிழ் ஜோதி, எம்.என்.ராஜா, கவிதா நவநீதம் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

மாவட்ட மருத்துவரணி நிர்வாகிகள் டாக்டர் மலர்க்கொடி, டாக்டர் வெங்கட்ராமன், டாக்டர் சர்மிளா பானு, டாக்டர் சக்தி அபர்ணா, டாக்டர் திருப்புகழ் செல்வன், பாலசுந்தரம், டாக்டர் வீரராகுல், டாக்டர் கே.அரவிந்தன், தீபன், சரவணன், அரவிந்தன், கே.பி.ரமேஷ் குமார் உள்ளிட்டோர் முகாமை சிறப்புடன் நடத்தினர்.

மேட்டுப்பாளையம் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் முகாமில் பங்கேற்று பலன் பெற்றனர். கிளை செயலாளர்கள் ஏ.வி.செந்தில், கே. பத்மநாபன், அன்பழகன்,துரை சிங்கம், மாணிக்கவாசகம் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் தெற்கு,வடக்கு,மேற்கு ஆகிய மூன்று ஒன்றியங்களின் சார்பில் நடைபெற்ற கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பல்வேறு கருத்துகளை முன் வைத்து கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றியக் குழு தலைவர்கள், துணைத் தலைவர், மாவட்டக் கவுன்சிலர், ஒன்றியக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

# சவுதி அரேபியா அமைச்சகத்தில் பணி புரிய மருத்துவர்களுக்கு ஓர் வாய்ப்பு!

## அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன தலைவர் அறிவிப்பு!

சென்னை, செப். 6 -

சவுதி அரேபிய அமைச்சகத்தில் பணிபுரிய (Consultant/Specialist) அலோபதி மருத்துவர்களுக்கு அரிய வாய்ப்பு தற்போது வந்துள்ளதாக, முனைவர். சி.ந.மகேஸ்வரன், தலைவர் (ம) நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய அமைச்சகத்தில் உள்ள மருத்துவ பணிக்கு முதுகலை பட்டம் பெற்ற (Consultant/Specialist) மருத்துவர்கள் 55 வயதிற்கு மிகாமல், 3 வருட பணி அனுபவத்துடன் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கான நேர்காணல் ஹைதராபாத்தில் நடை பெறவுள்ளது. மேற்படி பணியாளர்களுக்கு உணவுப்படி, இருப்பிடம், விமான பயணச்சீட்டு ஆகியவை அந்நாட்டின் வேலையளிப்பவரால் வழங்கப்படும்.

இந்நிறுவனம் மூலமாக அளிக்கப்படும் வெளிநாட்டு வேலைகளுக்கான பணிக்காலியிடங்கள் குறித்த விவரங்கள் இந்நிறுவன வலைத்தளமான www.omcmanpower.tn.gov.inல் கண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்கள் பற்றிய விவரங்களை அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன தொலைபேசி எண்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம் (What's App Number: 9566239685/ 6379179200) (04422505886/ 044 22502267).

அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு எந்த ஒரு இடைத்தரகரோ, ஏஜெண்ட்டுகளோ கிடையாது. விண்ணப்பதாரர்கள் அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ வலைதளமான www.omcmanpower.tn.gov.in-ல் நேரிடையாக பதிவு செய்து இந்நிறுவனத்தின் மூலம் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன தலைவர் - நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம் அரசூரில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு கருத்துகளை முன்வைத்து ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., கிழக்கு ஒன்றியச் செயலாளர் ம.சந்திரசேகரன் ஆகியோர் உள்ளனர்.